**தலைப்பு 257 - களுத்துறை மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன களுத்துறை மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினது நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் நிதி உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய நிதியங்களை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையறைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 257 – களுத்துறை மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 16 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக களுத்துறை மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியிருப்பதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1 | பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.5 |
| | | 2 | கட்டுநிதி மதிப்பீடு தயாரிப்பதில் குறைபாடுகள் | 2.7(அ) |
| | | 3 | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பாடமை. | 2.9 |
| | | 4 | எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்து கொள்ளாமை | 2.2(அ)(I) |
| | | 5 | செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் | 2.1.1 |
| | | 6 | திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தாமை | 2.1.2 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.6 |

| | | | | |
|---|---|---|---|---|
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | | சொத்துக்கள் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் | 2.2 |
| 128(1)(ஐ) | உத்தியோகத்தர்களின் / ஊழியர்களின் தாமதம், அலட்சியம், தவறு அல்லது மோசடியின் காரணமாக அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது நிதிப்பிரமாணங்கள் 103 இலிருந்து 108 வரையான பிரமாணங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்பற்றப்படுகின்றன என்பதுவும் நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் சம்பந்தமாக பொறுப்பான உத்தியோகத்தர்கள் / ஊழியர்களை அடிப்படையாகக் கொண்டு மிகை அறவீடுகள் விதிக்கப்படுகின்றன என்பதுவுமாகும். (கண்காணிக்கும் பொருட்டு போதிய ஒழுங்குகள் மேற்கொள்வது அவரின் பொறுப்பாக உள்ளதெனவும்) | 1. | அரசின் சொத்துக்கள் முறையற்ற பாவனை | 2.2(ஆ) |
| | | 2. | கையேற்கப்படாத சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல | 2.2(இ) |
| | | 3. | நிதி முறைகேட்டுத் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் | 2.3 |
| | | 4. | நட்டங்களும் சேதங்களும் | 2.4 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

மாவட்ட செயலகத்தினால் பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அச்செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

| | செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பித்த திகதி | 2017 திசெம்பர் 31 உள்ளவாறான செலவினம் | கைவிட்டதற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | ரூபா | |
| (i) | வலல்லாவிட இக்தேபான தெற்கு மாலம்பேஹேன மயானம் | 8,116,833 | 2014 | 8,732,219 | எரிப்பான் நிறுவப்படாமை |
| (ii) | மில்லனிய வெலிகல சேவை இல்ல கட்டிடம் | - | 2014 | 2,500,000 | வேலை பூர்த்தி செய்யப்படாமை |
| (iii) | புலத்சிங்ஹள திவலகட சுகாதார நிலையக் கட்டிடம் | - | - | 500,000 | பணம் ஒதுக்கீடு செய்யப்படாமை |
| (iv) | புலத்சிங்ஹல பொலேகொட மேற்கு சனசமூக மண்டபம் | - | 2014 | 1,000,000 | திறந்து வைக்கப்படாமை |
| (v) | அகலவத்த உடுவெல கூட்ட மண்டபம் | - | 2014 | 4,030,174 | வேலை பூர்த்தி செய்யப்படாமை |
| (vi) | அகலவத்த யட்டியன கிழக்கு கொட வட ஹென சனசமூக மண்டபம் | - | 2015 | 983,276 | வேலை பூர்த்தி செய்யப்படாமை |
| (vii) | அகல வத்த வதுரப்ப சனசமூக மண்டபம் | - | 2014 | 490,200 | வேலை பூர்த்தி செய்யப்படாமை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (viii) | ஹொரன கிதெல்பிட்டிய நீர் செயற்திட்டம் | - | 2011 | 400,000 | நிதிஏற்பாடு போதியளவில் இல்லாமை |
| (ix) | ஹொரன கிதெல்பிட்டிய நீர் செயற்திட்டம் | 1,250,000 | 2016 | 100,000 | நிதிஏற்பாடு போதியளவில் இல்லாமை |
| (x) | ஹொரன கிதெல்பிட்டிய நீர் செயற்திட்டம் | 14,172,680 | 2014 | 7,205,467 | எரிப்பான் நிறுவப்படாமை |
| (xi) | பொதுவில சுடலைச்சாலை | 1,939,646 | 2014 | 1,397,561 | வேலை பூர்த்தி செய்யப்படாமை |
| (xii) | பெல்லபிட்டிய ஆரம்ப வித்தியாலயத்தின் புதிய கட்டிடம் | 19,145,870 | - | 8,523,967 | வேலை பூர்த்தி செய்யப்படாமை |
| | | | | -------------- 35,862,864 ========= | |

## 2.1.2 திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படாமை

கிராம விரிவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2001 ஆம் ஆண்டில் இங்கிரிய 620 பீ நிமலகம கிராம சேவையாளர் பிரிவில் சொய்சா தோட்டத்திற்குரிய காணியில் ரூபா 98 மில்லியன் இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 40.957 ஹெக்டேயர் ஹெக்டேயர்களில் ரூபா 54 மில்லியன் பெறுமதியான 22.58 ஹெக்டேயர் அளவிலான காணித் துண்டொன்று கீழே காட்டப்பட்ட செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமையால் இது வரை பாவனையிலிருந்து விலகி இருந்தது.

| உத்தேச செயற்திட்டத்தின் பெயர் | ஒதுக்கப்பட்டிருந்த காணி அளவு |
|---|---|
| | ஹெக்டேயர் |
| விளையாட்டரங்கு | 5.0 |
| பாடசாலை | 2.4281 |
| இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் | 6.0312 |
| மூலிகை தோட்டம் | 3.1250 |
| ருவன்புர அதிவேக நெடுஞ்சாலைக்காக | 6.0 |
| | **22.5843** ======= |

## 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) அரசிற்கு சொந்தமான சொத்துக்கள் செயற்திறனாக பயன்படுத்தாமை

(i) தொடங்கொட பிரதேச செயலக வளவில் 2015 ஆம் ஆண்டில் ரூபா 127.84 மில்லியன் செலவிடப்பட்டு குளிஷரூட்டப்பட்ட 850 இருக்கைகளுடன் கூடிய புதிய கேட்போர் கூடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2016 யூன் 04 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டிருந்த இந்த கேட்போர் கூடம் அத்திகதி முதல் 2017 நவம்பர் 30 ஆந் திகதி வரை 13 காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் நடாத்தி உழைத்த வருமானம் ரூபா 875,000 ஆக் இருந்த போதிலும் அக்காலப்பகுதியில் பராமரிப்பு செலவினமாக ரூபா 1,735,750 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ii) பேருவள மாலேவத்கொடை சேவை இல்லம் ஹொரணை வடக்கு ஒசுசல மற்றும் புளத்சிங்ஹல நிக்கல பாஹியங்கல் ஓய்வறை என்பன முறையே 3 ஆண்டுகள் முதல் 5 ஆண்டுகள் வரையான காலம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) அரச சொத்துக்களின் முறையற்ற பாவனை

பாணந்துறை வலான கிராமசேவையாளர் பிரிவின் ஒதுக்கு காணியொன்றில் அத்துமீறி நிர்மாணிக்கப்பட்டிருந்த நிர்மாணங்களை அகற்றுமாறு 2005 ஆம் ஆண்டில் நீதிவான் நீதிமன்றத்தினால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் இதுவரை அக்கட்டளைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### (இ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்

(i) 2002 ஆம் ஆண்டிலிருந்து 100 நாட்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 633 கனன்வில கிராமசேவையாளர் பிரிவின் நாக ஹகந்தேவத்த காணியில் 5.048 ஹெக்டேயர் அளவில் பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் இதுவரை அக்காணி அரசிற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பேருவள பிரதேச செயலகப் பிரிவின் ஹெட்டிமுல்ல கிராம சேவையாளர் பிரிவில் ரூபா 1,864,499 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த சேவை இல்லத்திற்குரிய காணி, தனியார் காணியொன்றாக இருந்ததுடன் அதன் உரித்தினை அரசிற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 நிதி முறை கேட்டு தன்மையிலான கொடுக்கல்வாங்கல்

2017 மே மாதம் ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலைமையின் போது களுத்துறை பிரதேச செயலக அதிகாரப்பிரதேசத்தில் 15 கிராம சேவையாளர் பிரிவிற்குரிய 7,089 நபர்களுக்காக 2017 மே மாதம் 27 முதல் 2017 யூன் 01 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 62,376 உலர் உண்வு பொதிகள் வழங்கப்பட்டதாக போலியான பட்டியல்கள் மற்றும் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட்டு ரூபா 6,770,210 தொகை 15 கிராம சேவை உத்தியோகத்தர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

## 2.4 நட்டங்களும் சேதங்களும்

பிரதேச செயலகத்திலிருந்து ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளும் நபர்களுக்கு இடையே 2006 - 2016 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மரணித்த 5 நபர்களுக்காக ஓய்வூதிய கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,023,699 தொகையில் ரூபா 2,293,295 தொகை உரிய வங்கிகளிலிருந்து மீள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் ரூபா 730,404 தொகை அறவிட முடியாதிருந்தது.

## 2.5 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்புக்கள் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 646.37 | 639.10 | 7.27 | 1.12 |
| | மூலதனம் | 60.60 | 60.05 | 0.55 | 0.91 |
| | மொத்தம் | **706.97** | **699.15** | **7.82** | **1.11** |
| **2014** | மீண்டுவருபவை | 613.07 | 612.20 | 0.87 | 0.14 |
| | மூலதனம் | 263.75 | 178.79 | 84.96 | 32.21 |
| | மொத்தம் | **876.82** | **790.99** | **85.83** | **9.79** |
| **2015** | மீண்டுவருபவை | 796.20 | 795.59 | 0.61 | 0.17 |
| | மூலதனம் | 120.20 | 116.60 | 3.59 | 2.99 |
| | மொத்தம் | **916.40** | **912.19** | **4.20** | **0.46** |
| **2016** | மீண்டுவருபவை | 834.0 | 832.62 | 1.38 | 1.06 |
| | மூலதனம் | 238.0 | 185.12 | 52.88 | 22.22 |
| | மொத்தம் | **1,072.0** | **1,017.74** | **54.26** | **5.06** |
| **2017** | மீண்டுவருபவை | 848.44 | 832.99 | 15.45 | 1.82 |
| | மூலதனம் | 1,237.43 | 377.22 | 860.21 | 69.52 |
| | மொத்தம் | **2,085.87** | **1,210.21** | **875.66** | **41.98** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலத்தினால் வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக பாதிப்படைந்த உட்கட்டமைப்பு வசதிகளை உரிய நிலைமைக்கு கொண்டு வருவதற்காக ரூபா 1,036.430 மில்லியனும் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களுக்காக ரூபா 170 மில்லியனுமாக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சாத்திய வள ஆய்வொன்றும் பெறுகை செயற்பாட்டிற்குரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மொத்த நிதி ஏற்பாட்டையும் பயன்படுத்த முடியாமையால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் முறையே ரூபா 316.217 மில்லியன் அதாவது 31 சதவீதம் மற்றும் ரூபா 28.62 மில்லியன் அல்லது 16 சதவீதம் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மூலதன செலவின விடயத்தின் கீழ் பிரதேச செயலகங்களுக்காக பகிர்ந்தளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட ரூபா 1,036.43 ஆன நிதி ஏற்பாட்டில் ரூபா 37.25 மில்லியன் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

**(இ) பிற அமைச்சுக்களாலும் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தல்**

ஏனைய 31 அமைச்சுக்களாலும் 15 திணைக்களங்களாலும் பல்வேறு செயற்பாடுகளுக்காக முறையே 3,457.47 மில்லியன் மற்றும் ரூபா 414.28 மில்லியன் என ரூபா 3,871.75 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 2,868.65 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 1,003.10 மில்லியன் அதாவது 26 சதவீதமான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிப்பு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) விளையாட்டு அமைச்சினால் ரூபா 7.58 மில்லியன் நிதி ஏற்பாட்டின் பேரில் கெலிடோ கடற்கரையில் 2017 ஆம் ஆண்டில் சாத்தியவா ஆய்வொன்றில்லாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்த நடப்பதற்கான ஒரு பாதை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் இவ்விடத்திற்கு அருகில் களுகங்கை, வழிந்தோடுவதால் உரிய நிறுவனங்களிலிருந்து அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளாமல் இச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

(ii) அமைச்சு மற்றும் 08 திணைக்களங்களால் வெவ்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,160.89 மில்லியன் நிதி ஏற்பாட்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் செலவிடப்பட்ட தொகை ரூபா 416.22 மில்லியனாக இருந்தமையால் உரிய செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட சேமிக்கப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 744.67 மில்லியனாக இருந்தது. அச்சேமிப்புக்கள் அந்த அமைச்சு மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 53 சதவீததிலிருந்து 79 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

களுத்துறை மாவட்ட செயலகத்திற்குரிய 25701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| **செலவு** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 122.00 | 116.56 | 62.00 | 63.98 | 320.00 | 266.17 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவையான கடன் மீதிகள்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவீடு நிலுவையாகக் மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் தவிர ரூபா 813,145 ஆக

இருந்ததுடன் அந் நிலுவைக் கடன் மீதிகள் 03 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரையானவீச்சில் இருந்து வந்தன. அந்நிலுவை கடன் மீதிகளை அறவிடுதின் பின்தொடர் நிலைமை பலவீனமான நிலைமையொன்றில் காணப்பட்டது.

## 2.7 கட்டுநிதி

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

திட்டமிட்டதன் பிரகாரம் திட்டவட்டமான காலப்பகுதிக்குரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமல் அவை ஆண்டின் இறுதியில் நிறைவேற்றுவதற்கு பயன்படுத்துவதன் காரணமாக தேவையான கட்டுநிதி திறைசேரியிடமிருந்து கிடைத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக சேதமடைந்த உட்கட்டமைப்பு வசதிகளை உரிய நிலைக்கு கொண்டுவருவதற்காக வழங்கப்பட்ட ரூபா 1,036 மில்லியன் நிதி ஏற்பாட்டிலிருந்து கட்டுநிதியாக வழங்கப்பட்டிருந்த தொகை ரூபா 180.02 மில்லியனாக இருந்ததுடன் 02 நிகழ்ச்சித்திட்டங்களில் நிறைவேற்றப்பட்ட பணிகளுக்காக பணம் செலுத்த முடியாதிருந்த பட்டியல்களின் பெறுமதி ரூபா 584.80 மில்லியனாக இருந்தது.

## 2.8 பொது வைப்புக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் 06 பொது வைப்புக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 441.047 மில்லியனான மீதியொன்று காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 9,187,619 தொகையான 10 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதுராவெல பிரதேச செயலகத்தின் காணி கையேற்கும் போது இழப்பீட்டுத் தொகையாக செலுத்த வேண்டிய ரூபா 6.86 மில்லியன் பணம் 2010 ஆம் ஆண்டிலிருந்து வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 2.9 பதிவேடுகளையும் புத்தகங்களையும் பேணாமை

மாவட்ட செயலகத்தினால் சில பதிவேடுகளைப் பேணாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்பட்டிருக்கவில்லை எனக் கணக்காய்வுத் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கணனிகள், துணைப் பாகங்கள், மென் பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | பெறுகைகள் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகை பதிவேடு | அரச பெறுகை வழிகாட்டல் டீகாவையின் 2.11.2 ஆம் வழிகாட்டல் | பேணப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மின்உபகரணங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்படவில்லை |
| (உ) | மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர் வழங்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர் பதிவேடு | தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் அலுவலகத்தின் 2014 நவம்பர் 14 ஆந் திகதிய BD/GPS/130/9/14/MC/1 ஆம் இலக்க அறிவுறுத்தல் கோவை | பேணப்படவில்லை |

## 2.10 மனித வளங்கள் முகாமைத்துவம்

---

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

---

கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 744.39 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு நபருக்கான செலவினம் ரூபா 322,245 ஆக இருந்தது.

| **ஆளணி வகை** | | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 75 | 68 | 7 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 56 | 39 | 17 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 2,422 | 2,054 | 368 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 168 | 149 | 19 |
| | மொத்தம் | **2,721** | **2,310** | **411** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

களுத்துறை மாவட்ட செயலகத்திலும் 14 பிரதேச செயலகங்களிலும் திட்டமிடல் பிரிவிற்கு இணைக்கப்பட்ட 273 உத்தியோகத்தர்களில் 56 பேர் 5 வருடங்களுக்கு 19 இற்கும் இடையே காலம் ஒரே சேவை நிலையத்தில் சேவை புரிந்து வந்தனர்.